**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 305/2011**

திரு.பாலசுப்பிரமணியம் (D.W –2) **15.7.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. அ.வ.எண். 411/2019 வழக்கில் எவ்வளவு சொத்துக்களுக்கு எந்த புல எண்னில் பரிகாரம் கோரி உள்ளேன் என்றால் சர்வே எண் 115/9, 10 ஆகிய பூமியில் 1.80 ஏக்கர் செண்ட் சொத்தைப் பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண். 115/10 உரிய பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். வருவாய் ஆவணம் படி சர்வே எண். 115/9 மொத்த விஸ்தீரனம் 1.89 செண்ட் என்றால் தவறு. வருவாய் ஆவணங்களின் படி சர்வே எண். 115/9 மொத்த விஸ்தீரணம் 0.76.5 ஹெக்டேர் என்று உள்ளது என்றால் ஆமாம். ஏக்கர் கணக்கில் பார்க்கும்போது மொத்த விஸ்தீரணம் 1.89 ஏக்கர் என்றால் சரியாக எனக்குத் தெரியாது 1.80 ஏக்கர் சொத்து கிரையம் பெற்றுள்ளேன்.

2. சர்வே எண்.115/10 வருவாய் ஆவணங்களின்படி மொத்த விஸ்தீரணம் 0.03.0 ஹக்டர் என்றால் சரி. ஏக்கரின் படி கணக்கு போட்டால் 0.7 1/2 செண்ட் என்றால் சரி. நான் கிரயம் பெற்ற மொத்த விஸ்தீரணத்தை விட சொத்துக்கள் வருவாய் ஆவணங்களின் படி அதிகமாக இருப்பதால் என்னுடைய முன் பாத்தீஸ்தரரான சுப்பையா கவுண்டரின் மகள்களுக்கு உரிமை உள்ளது என்றால் தவறு. அதனால் வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து உரிமை உள்ளது என்றால் சரியல்ல. பொன்னுசாமி மற்றும் சுப்பையா பெயரில் ஏற்பட்டுள்ள தான செட்டில்மெண்ட்

ஆவணங்களின்படி சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 2.62 ஏக்கர் என்றால் எனக்குத் தெரியாது. அந்த சொத்துக்களை பொறுத்து அசல் வழக்கு எண். 411/2019 தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் கிரயம் பெற்ற சொத்துக்களை பொறுத்து தாவா தாக்கல் செய்துள்ளேன்.

3. வாதிக்கு தாவா சொத்தில் பங்கு இருந்ததால் தான் அந்த சொத்துக்களை பொறுத்து வாதி அவருடைய மகனுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் தவறு. ராமாத்தாள் மற்றும் லட்சுமி ஏற்படுத்தியுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணங்கள் என்றால் சரியல்ல. சர் வே எண். 115/9, 10 சொத்துக்களில் வாதிகள் சுவாதினத்தில் இருந்ததால் தான் வாரிசு கிரம படி அவர்கள் பெயர் பட்டாவில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் முதலில் 1910 கிரைய ஆவணத்தின் படி சுப்பையா கவுண்டரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டவை என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் பிதுராஜ்ஜிய சொத்துக்கள் என்பதால் என்னுடைய தாத்தா 1960 ஆம் வருடம் ஏற்படுத்திய கிரய ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

4. 1960 ஆம் வருடத்தில் கிரைய ஆவணத்தில் லட்சுமி, ராமாத்தாள் பெயர் ஈடுபட்டுள்ளது என்றால் சரி. அவர்களுக்கு சொத்தில் பாத்தியம் இல்லை. வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பெயர் இல்லாமல் 1960 ஆம் வருடம் என் தகப்பனார் பெயரில் ஏற்பட்டுள்ள கிரய ஆவணம் செல்லாது அதன் அடிப்படையில் நான் 1.80 ஏக்கர் சொத்தில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் என்னுடைய பாட்டனாருக்கு உரிமை இல்லாத போது தாவா நிலுவையில் உள்ள போது என்னுடைய தகப்பனார் ஏற்படுத்தியதாக சொல்லும் உயில் ஆவணமும் செல்லாது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான்

தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. தவறான ஆவணங்களின் அடிப்படையில் அதிகமான சொத்துக்களை கைப்பற்ற வேண்டி அ.வ.எண். 411/2019 தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. வாதி, 1ம் பிரதிவாதியும் அவர்களுக்கு தாவா சொத்தில் உள்ள உரிமை அடிப்படையில் தான் வாதி அவருடைய மகன் பெயரிலும் 1ம் பிரதிவாதி அவருடைய கணவர் பெயரிலும் தான செட்டில்மெண்ட் பத்திரங்களை ஏற்படுத்தி உள்ளார்கள் என்றால் தவறு உண்மை அல்ல. தாவா சொத்தில் வாதிகளும் 1ம் பிரதிவாதியும் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதால் தாவா சொத்தில் அவர்களுக்கு உரிமை பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல.

6. நான் குற்றவியல் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ள தனிப்பட்ட புகார் பொய்யான புகார் என்றால் தவறு. தாவா சொத்து வாதிக்கு தாவாவில் வாதுரைத்து சொன்னவாறு பாத்திக்கப்பட்டது பொய்யான முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா வாதி கோரியப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

1, 2, 18 முதல் 21 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.15 18:42:45 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.